ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

# ॥ அமலனாதிபிரான் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அமலனாதிபிரான் ॥

## பெரிய நம்பிகள் அருளிச் செய்த தனியன்

ஆபாத$_3$சூட$_3$மநுபூ$_4$ய ஹரிம் ஶயாநம்
மத்$_4$யே கவேரது$_3$ஹிதுர்முதி$_3$தாந்தராத்மா ।
அத்$_3$ரஷ்ட்ருதாம் நயநயோர்விஷயாந்தராணாம்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ॥

## திருமலை நம்பிகள் அருளிச் செய்த தனியன்

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி⋆
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்⋆
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து⋆
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே

‡அமலன் ஆதிபிரான்⋆ அடியார்க்கென்னை ஆட்படுத்த
விமலன்⋆ விண்ணவர் கோன்⋆ விரையார் பொழில் வேங்கடவன்⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன்⋆ நீள் மதிள் அரங்கத்தம்மான்⋆ திருக்-
கமல பாதம் வந்து⋆ என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே (1)

உவந்த உள்ளத்தனாய்⋆ உலகம் அளந்தண்டம் உற⋆
நிவந்த நீள் முடியன்⋆ அன்று நேர்ந்த நிசாசரரைக்⋆
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்⋆ கடி-
யார் பொழில் அரங்கத்தம்மான்⋆ அரைச்-
சிவந்த ஆடையின் மேல்⋆ சென்றதாம் என சிந்தனையே (2)

‡மந்தி பாய்⋆ வட வேங்கட மா மலை⋆ வானவர்கள்
சந்தி செய்ய நின்றான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
அந்தி போல் நிறத்தாடையும்⋆ அதன்
மேல் அயனைப் படைத்ததோர் எழில்⋆
உந்தி மேலதன்றோ⋆ அடியேன் உள்ளத்தின் உயிரே (3)

சதுர மா மதிள் சூழ் இலங்கைக்கிறைவன்⋆ தலைபத்-
துதிர ஓட்டி⋆ ஓர் வெங்கணை உய்த்தவன்⋆ ஓத வண்ணன்⋆
மதுர மா வண்டு பாட⋆ மா மயில் ஆடரங்கத்தம்மான்⋆ திரு வயிற்-
றுதர பந்தம்⋆ என் உள்ளத்துள் நின்றுலாகின்றதே (4)

பாரம் ஆய⋆ பழவினை பற்றறுத்து⋆ என்னைத் தன்
வாரம் ஆக்கி வைத்தான்⋆ வைத்ததன்றி என்னுள் புகுந்தான்⋆
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்⋆ அரங்கத்தம்மான்⋆ திரு
ஆர மார்வதன்றோ⋆ அடியேனை ஆட்கொண்டதே (5)

துண்ட வெண்பிறையன்⋆ துயர் தீர்த்தவன்⋆ அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில் சூழ்⋆ அரங்க நகர் மேய அப்பன்⋆
அண்டர் அண்ட பகிரண்டத்து⋆ ஒரு மாநிலம் எழுமால் வரை⋆ முற்றும்
உண்ட கண்டம் கண்டீர்⋆ அடியேனை உய்யக்கொண்டதே (6)

கையின் ஆர்⋆ சுரி சங்கனல் ஆழியர்⋆ நீள்வரை போல்
மெய்யனார்⋆ துளப விரையார் கமழ் நீள் முடி எம்
ஐயனார்⋆ அணி அரங்கனார்⋆ அரவின் அணைமிசை மேய மாயனார்⋆
செய்ய வாய் ஐயோ!⋆ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! (7)

பரியன் ஆகி வந்த⋆ அவுணன் உடல் கீண்ட⋆ அமரர்க்-
கரிய ஆதிப் பிரான்⋆ அரங்கத்தமலன் முகத்து⋆
கரிய ஆகிப் புடை பரந்து⋆ மிளிர்ந்து செவ்வரி ஓடி⋆ நீண்ட அப்-
பெரிய வாய கண்கள்⋆ என்னைப் பேதைமை செய்தனவே! (8)

‡ஆலமா மரத்தின் இலைமேல்⋆ ஒரு பாலகனாய்⋆
ஞாலம் ஏழும் உண்டான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
கோலமா மணி ஆரமும்⋆ முத்துத் தாமமும் முடிவில்லதோர் எழில்⋆
நீல மேனி ஐயோ!⋆ நிறை கொண்டதென் நெஞ்சினையே! (9)

‡கொண்டல் வண்ணனைக்⋆ கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்⋆ என் உள்ளம் கவர்ந்தானை⋆
அண்டர் கோன்⋆ அணி அரங்கன்⋆ என் அமுதினைக்
கண்ட கண்கள்⋆ மற்றொன்றினைக் காணாவே (10)

॥ திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம் ॥